**இலங்கை சுங்க அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2025**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுங்க அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகளின் ஊடாக 2025 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுகள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன்.அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்துக்களை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுகளில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருத்தல் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிதியத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமம் 01 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக் கூற்றுக்கள் திரண்ட அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் நிதியத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் திரண்ட அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் இனங்காட்டப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் | தண்டப் பணமாக பெறப்படும் நிதியானது பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன், விசாரணைக் கோப்புகள் நிறைவுபெற்றதும் வெகுமதி கோப்புகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்திலேயே சுங்க அலுவலர்களின் வெகுமதி நிதியத்திற்கு (50%), முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு (20%) மற்றும் அரசாங்க வருமானத்திற்கு (30%) எனப் பிரித்து செலவு | இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக பெற வேண்டிய வருமானம் திரண்ட அடிப்படையில் முறையாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் பதிவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளித்தரப்பினரிடமிருந்து இலங்கை சுங்கத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலுவை தண்டப் பணம் மற்றும் பறிமுதல்கள் ரூபா 7,152 மில்லியனாகவும், இலங்கை சுங்கத்தின் கணக்குக் கிளையினால் தண்டப் பணம் மற்றும் பறிமுதல்களாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் வெகுமதிக் கோப்புகள் தயாரிக்கப்படாத தொகையானது ரூபா 2,064 மில்லியனாகவும் காணப்பட்டது. அதற்கமைய, மொத்தத் தொகையான ரூபா 9,216 மில்லியனில் நிதியத்திற்குரிய 20 சதவீத பங்கான ரூபா 1,843 மில்லியனானது நிதியத்திற்கு பெற வேண்டிய வருமானமாக நிதிக்கூற்றுக்களில் இனங்காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, வருமானக் கூற்றின் மேலதிகமும், நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைச் சொத்துக்களும் அத்தொகையினால் குறைவாகக் இனங்காட்டப்பட்டிருந்தன. | வைக்கப்படுகின்றது. அதுவரை அப்பணமானது சுங்கத்தின் பொது வைப்புக் கணக்கிலேயே காணப்படும். முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு கிடைத்த ஒன்றாகக் குறிக்கப்படுவது, உண்மையிலேயே பொது வைப்புக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு சுங்க அலுவலர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்குப் பெறப்படும் சந்தர்ப்பத்திலேயே ஆகும். | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன், எதிர்பார்க்கப்படும் நிலைமைகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின், அவ்வேறுபாடுகள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் படி கணக்கில் பதிவிடப்பட வேண்டும். எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த செலவுத் தொகை ரூபா 254,775,123 கொண்ட ஆயுதங்கள், நூலகப் புத்தகங்கள், கணினிகள் மற்றும் கணினி உபகரணங்கள், | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்பகின்றேன். எதிர்காலத்தில் அவதானிக்கப்பட்டதற்கு இனங்க செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான கணக்கீட்டு சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொலைக்காட்சி இயந்திரங்கள், ஆய்வக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் தொடர்பில் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு, தேவையான கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | ஆயுதங்கள், கணினிகள், கணினி உபகரணங்கள், தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 236,235,192 | நிலையான சொத்துக்களின் பதிவேடு, பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைகள் | சொத்துக்களைச் சரிபார்த்தல் மற்றும் கண்காணிப்பதற்குத் தேவையானவாறு எதிர்காலத்தில் பதிவேடுகளைத் தயாரிப்பதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் இருப்பு, பாதுகாப்பு மற்றும் பொறுப்புடைமை என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக புதுப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பராமரித்துச் செல்வதும், முறையாக பொருட் கணக்கெடுப்புகளை நடாத்தி அவ்வறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | பொருத்துதல்கள் மற்றும் இணைப்புகள் | 20,511,735 | | | |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 371 | செயல் நிமித்த உபகட்டுநிதியானது உரிய அந்தப் பணியானது நிறைவடைந்தவுடன் | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்பகின்றேன். செயல் நிமித்த உப கட்டுநிதியினைப் பணி நிறைவடைந்த | முற்பணங்களைத் தீர்க்கும் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| ஆம் நிதிப் பிரமாணம் மற்றும் 2020 ஒகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | தீர்க்கப்படுதல் வேண்டும். எவ்வாறெனினும் 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 5,600 தொடக்கம் ரூபா 500,000 வரையிலான எல்லைக்குள் காணப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதற்காக 11 தொடக்கம் 138 நாட்கள் கடந்திருந்தன. | உடனேயே அவ் உப உப கட்டுநிதியினைத் தீர்க்குமாறு உரிய பிரிவுகளின் அதிகாரிகளுக்கும் முன்பணம் பெற்றுக்கொண்ட அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. | அமைய இணங்கி நடாத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,396,574,389 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,346,928,257 ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 49,646,132 அதாவது 1.4 சதவீத சிறிய முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த செலவீனம் ரூபா 4,017,657 ஆல் குறைவடைந்தமையும் மொத்த வருமானம் ரூபா 45,628,475 ஆன அதிகரிப்பும் இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்க அலுவலர்களின் முகாமைத்துவத் திறனை மேம்படுத்துவதற்கும் அலுவலர்களிற்கு இழப்பீடு வழங்குவதற்குமான குறிப்பிட்ட அளவுகோல்கள் மற்றும் எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட இலக்குச் செலவினங்களைச் சரியாகத் திட்டமிடுதல் இன்றி நிதியத்திற்குப் பணத்தை ஒதுக்கியமையின் காரணமாக, நிதியத்தின் திரண்ட மீதியானது தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கான ஒரு போக்கு அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 15,843 மில்லியனாகக் காணப்பட்ட நிதியத்தின் திரண்ட மீதி, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது ரூபா 19,239 மில்லியன் | | |

| | | | |
|---|---|---|---|
| | வரை ரூபா 3,396 மில்லியனால் அதாவது 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. நிதியத்தின் திரண்ட மீதி தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கு பின்வரும் காரணங்களும் முக்கியமாகச் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. | | |
| (i) | மீளாய்வாண்டிலும் கடந்த 05 ஆண்டுகளிலும் நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 11,786,494,198 ஆகக் காணப்பட்டபோதிலும், அந்தக் காலப்பகுதியில் நிதியத்திற்கு ஏற்கப்பட்ட செலவீனம் ரூபா 254,995,574 (பெறுமானத் தேய்வு தவிர்ந்த) அதாவது மொத்த வருமானத்தில் 2 சதவீதம் மாத்திரமே ஆகும், எஞ்சிய தொகையானது நிதியத்தின் திரண்ட மீதியுடன் சேர்க்கப்பட்டிருந்தமை. | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதியத்திலிருந்து இழப்பீடு வழங்குவதற்காகத் தெளிவான அளவுகோல்களைத் தயாரிப்பதிலும், பொருத்தமான மதிப்பீடுகளின் அடிப்படையில் நிதியத்திற்குப் பணத்தை ஒதுக்குவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | சுங்க வரி தொடர்பான மோசடிகளை கட்டுப்படுத்துவதற்காக செயற்கை நுண்ணறிவுடன் கூடிய மேம்பட்ட முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்காததாலும், அலுவலர்களின் பொதுவான கடமைகளில் கண்டறியப்படும் பல்வேறு சுங்க மீறல்களுக்கு அதிகமாகப் பரிசுகள் வழங்கியதாலும், கண்டறியப்படும் அனைத்து சுங்க மீறல்களுக்கும் 20% சதவீதம் நிதியத்திடம் வரவு வைப்புச்செய்யப்பட்டமை. | Rapiscan அமைப்பில் செயற்கை நுண்ணறிவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அவ்வமைப்பில் ஏற்கனவே காணப்பட்டபோதிலும், அதற்காக ஏற்கவேண்டியுள்ள அதிக செலவு காரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், சுங்க வரிக் குற்றங்கள் மற்றும் மோசடிகளைக் கண்டறியும்போது சுங்க அலுவலர்களின் தனித்துவமான திறன், அறிவு மற்றும் அனுபவம் என்பன பயன்படுத்தப்படுவதுடன், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக்கு அமைவாக உரிய பணமானது இந்நிதியத்திற்கு வைப்புச் செய்யப்படும். சுங்க வரி மோசடிகள் அல்லது தடைசெய்யப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்கான சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையாக அலுவலர்களுக்கும் உளவாளிகளுக்கும் பரிசுப் பணம் | சுங்க வரி மோசடிகளைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துவதன் வினைத்திறனை அதிகரிப்பதற்காகச் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப மற்றும் தரவுப் பகுப்பாய்வு முறைமைகளைச் செலவு-பயன் பகுப்பாய்வினைக் கருத்திற்கொண்டு முறையாக அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்படுதல் அவதானிக்கப்படுகின்றது. | |
| (iii) | சில சந்தர்ப்பங்களில் மோசடி செய்ய முயற்சிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் வரி மதிப்போடு ஒப்பிடுகையில் மூன்று மடங்கு மதிப்பு வரை தண்டப் பணம் விதிக்கப்பட்ட போதிலும், சுங்கக் குற்றங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படாமை மற்றும் தற்போதைய திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்பட்டுள்ள சிக்கலான தன்மைக்கு ஏற்ப சுங்கச் சட்டக் கட்டளை மற்றும் அது தொடர்பான நிதியங்களின் சட்ட விதிகளை முறையான மற்றும் காலத்திற்கேற்ற வகையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. | சுங்க மோசடி தொடர்பான குற்றங்களுக்கு பொருட்களின் மதிப்பைப்போல் மூன்று மடங்கு வரை அபராதம் விதித்தல் மற்றும் அதிகளவிலான மோசடிகளைக் கண்டறிந்து அதற்காக தண்டப் பணம்/பறிமுதல் செய்தல்களை மேற்கொள்வது திணைக்களத்தின் செயல்திறன் மற்றும் வருமான இலக்குகளை அடைவதற்குப் பெரிதும் பங்களித்துள்ளது என்பதையும், அது நிதியத்தில் சேரும் தொகையையும் அரசாங்கத்தின் வருமானத்தையும் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்பதையும் அவதானிக்கின்றேன். இருப்பினும், 05.11.1993 திகதிய 792 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் விதிகளின் பிரகாரம் நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தும்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், நிதியத்தின் கணக்கு மீதி அதிகரிப்பதற்குப் பங்களித்துள்ள முதன்மையான காரணங்களில் ஒன்றாகும் என்பதையும் அவதானிக்கின்றேன். | சுங்கச் சட்டக் கட்டளை மற்றும் அது தொடர்பான நிதியங்களுக்கான சட்ட விதிகளை முறையான மற்றும் காலத்திற்கேற்ற வகையில் திருத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (iv) | சுங்க அலுவலர்கள் தமது கடமைகளில் ஈடுபடும்போது ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு / விபத்துகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதியைப் பெற்றுக்கொள்வது இந்நிதியத்தின் முதன்மை நோக்கங்களில் ஒன்றாக அடையாளங்காணப்பட்டிருந்த போதிலும், கடந்த 13 ஆண்டு காலத்தில் அத்தகைய அசம்பாவிதங்கள் தொடர்பில் எந்தவொரு இழப்பீடும் வழங்கப்பட்டதாகப் பதிவாகியிருக்கவில்லை. | கடந்த 13 ஆண்டுகளில் அத்தகைய அசம்பாவிதங்களுக்கு இழப்பீடு கோரி எந்தவொரு கோரிக்கைகளும் கிடைக்கப்பெறவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிசார் தற்போதைய தேவைகள் மற்றும் நோக்கங்களை மீளாய்வு செய்து, அதற்கேற்ப தண்டப் பணம் மற்றும் பறிமுதல்களில் இருந்து நிதியத்திற்கு ஒதுக்கப்படும் சதவீதத்தையும் பொருத்தமான வகையில் மீளாய்வு செய்ய வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1_ **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்தின் உண்மையான மற்றும் பாதீட்டுச் செலவீனங்களை ஒப்பிடுகையில், காணப்படும் 07 செலவின வகைகளில் 04 வகைகளில் 38 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த வருமானத்தின் உண்மையான மற்றும் பாதீட்டு பெறுமதிகளுக்கும் இடையில் 44 சதவீத முரண் காணப்பட்டது. அதற்கமைய, பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ மற்றும் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இயலுமானவரை முரண்களைக் குறைக்கும் வகையில் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சரியான மற்றும் யதார்த்தமான எதிர்வுகூறல்களின் அடிப்படையில் பாதீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்து, பாதீட்டிற்கும் உண்மையான தரவுகளுக்கும் இடையே கணிசமான முரண்கள் ஏற்படுவதற்கான காரணங்களை முறையான வகையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |